Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 10 (25-11-1992) புதன்கிழமை ஓசை 281


## பயிலுநர் ஆசிரியர் விபரம் அனுப்பப் பணிப்பு

மத்திய கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டு தற்போது கடமையாற்றும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களைக் கோட்ட ரீதியாகச் சேகரித்து இவர்கள் பெறும் சம்பளத்தின் அடிப்படையில் வேறுபடுத்தி மொத்த எண்ணிக்கையைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளது. இவ்விபரங்களை மத்திய கல்வி அமைச்சர் தம்மிடம் கோரியுள்ளதாக வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (17)



விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினமிரவு தாக்குதலின்போது பலாலி காவலரண்களிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதியை படத்தில் காண்கின்றீர்கள். ◄—

பலாலி காவலரண்களில் இருந்து நேற்று முன்தினம் புலிகளால்கைப்பற்றப்பட்ட ரவைகளின் ஒருபகுதி. சுமார் ஒருலட்சம் ரவைகள் இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. —►



# 50 இராணுவம் பலி: 100 பேர் படுகாயம்

# பலாலி கிழக்கில் புலிகள் பாரிய தாக்குதல்

## நிலைகளிலிருந்து படையினர் விரட்டியடிப்பு

பலாலி இராணுவத் தளத்தின் கிழக்கு எல்லையோர பல மைல் நீளமான தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் பாரிய தாக்குதல் ஒன்றை தொடுத்தனர். இத் தாக்குதலின் போது பல மைல் நீளமான 150க்கும் மேற்பட்ட காவலரண்கள் அழிக்கப்பட்டதோடு, ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதப் படுத்தப்படுகின்றது. நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் செய்தி

## புலிகளுக்கு ஆயுதம் வருவதை கடற்படை தடுக்க முடியவில்லை

### குண்டுவெடிப்பில் இறந்த அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு) தைக் கடலிலேயே போக்குகின் தாகும் இவ்வாறு பிளாக்

தனர். இத் தாக்குதலின் போது பல மைல் நீளமான 150க்கும் மேற்பட்ட காவலரண்கள் அழிக்கப்பட்டதோடு, ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதப் படுத்தப்படுகின்றது. நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இப்பாரிய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மூண்ட உக்கிர மோதல் நேற்று அதிகாலை 3.30 மணிவரையும் இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது.

புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலை தொடர்ந்து தமது இறந்த சகாக்களின் சடலங்களையும் விட்டுவிட்டு இராணுவத்தினர் முகாமின் உட்பகுதி நோக்கி ஓடிவிட்டனர்.

பலாலி இராணுவ முகாமின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலை எதிர்த்து டாங்கிகளும், கவச வாகனங்களும், உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட அகோர எறிகணைத் தாக்குதலும், பீரங்கித் தாக்குதலும் நள்ளிரவு வேளை யாழ் குடாநாட்டை அதிரவைத்தன. அண்மைக் காலத்தில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட உக்கிர ஷெல் தாக்குதல் இதுவென களத்தில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, இராணுவத்தினரின் இவ் உக்கிர தாக்குதலின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைக் காவலரண்களில் இருந்து விரட்டியடித்ததாகத் தெரியவருகின்றது.

# 150 காவலரண்கள் தகர்ப்பு; $4\frac{1}{2}$கி. மீ. இராணுவ வேலி அழிப்பு

நேற்று முன்தினமிரவு புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலின்போது தொண்டமானாறு கடற்கரையிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான நான்கரை கிலோ மீற்றர் வரையிலான இராணுவக் காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

இத் தாக்குதலின் போது நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட காவலரண்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டன. காவலரண்களில் இருந்து சுமார் ஒருமைலுக்கும் அப்பால் இராணுவத்தினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

தொண்டமானாறு, இடைக்காடு, தம்பாலை, ஒட்டகப்புலம் பகுதிகளில் நடத்தப்பட்ட இப்பாரிய தாக்குதல் மூலம் இக் காவலரண்கள் தகர்க்கப்பட்டன.

பலாலி விமானத்தளத்தின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த முன்னணிக் காவலரண்களே இவை என்பது குறிப்பிடத்தக்கது.

# 46 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற உக்கிரச் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் நாற்பத்தாறு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இதில் ஆண், பெண் போராளிகள் அடங்குகின்றனர்.

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# பீரங்கி தகர்ப்பு

நேற்று முன்தினமிரவு விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரணில் இருந்து பீரங்கி ஒன்றும் விடுதலைப்புலிகளினால் அழிக்கப்பட்டதாகக் களத்தில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த இப் பீரங்கியைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் அதனைக் குண்டு வைத்துத் தகர்த்ததாகத் தெரியவருகின்றது.

## மாவீரர் புகழுடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி கிழக்குப் புற இராணுவக்காவலரண்கள்மீதுநடாத்திய தாக்குதல்களின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் வித்துடல்கள் வலிகாமம், வடமராட்சி மற்றும் தென்மராட்சி கோட்டங்களில் இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை பத்து மணிவரை இம்மாவீரர்களின் வித்துடல்கள் அவர்களின் வீடுகளில் வைக்கப்பட்டபின் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.30 மணிவரை வலிகாமம் கோட்டத்தில் சுன்னாகம் மத்திய சந்தையிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் சாவகச்சேரிச் சந்தையிலும், வடமராட்சிக் கோட்டத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் இறந்த அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு ஆயுதங்கள் கடல் வழியாக வருவதைத் தடுக்கும் நோக்கத்துடன் எமது படகுகள் அதிக நேரத்தைக் கடலிலேயே போக்குகின்றன அப்படியிருந்தும் புலிகள் கட்டைக் காட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார்கள் இது எம்மை அதைரியப்படுத்துவதாகும் இவ்வாறு பிளாக் லெப். சந்துன் குணசேகரா அவர் மரணத்துக்கு முன் கூறியிருந்தார்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## இரத்தம் உடன் தேவை

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது ஏற்பட்டுள்ள போர்க்கால சூழ்நிலையில் காயமடைந்து மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் நம் உடன் பிறப்புக்களை காப்பாற்ற இரத்ததானம் செய்ய முன்வருமாறு சகலரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# குறுகியநேரம்நடந்த மிகக்கொடியயுத்தம்

## இராணுவ அதிகாரிதெரிவிப்பு

(கொழும்பு)

''குறுகிய நேர இடைவெளியில் நடைபெற்ற மிகக் கொடிய யுத்தம்'' இவ்வாறு சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம்நடந்தபலாலியுத்தத்தை வர்ணித்தார்.

நள்ளிரவு முதல் அதிகாலை

[6ஆம் பக்கம் பார்க்க]

# பெருமளவு நவீன ஆயுதங்கள் ஒரு லட்சம் ரவைகள் மீட்பு

இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் பெருமளவு இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றி யுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ எம். கே. கனரக துப்பாக்கி — 01
★ ஜி. பி. எம். ஜி — 01
★ ஏ.கே.எல் எம் ஜி. — 10
★ ஆர். பி ஜி — 03
★ டொங்கான் — 05
★ 2அங் மோட்டோர் — 04
★ 60 எம். எம். மோட்டோர் — 03
★ ரி - 81 ரக துப்பாக்கி — 25
★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி — 03
★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி — 03
★ ரி - 56 புதியது — 02
★ ஜி 3 புஷ்பட் — 02
★ ஜி 3 செட்பட் — 07
★ பிறவுனிங் பிஸ்டல் — 01
★ தொலைத் தொடர்பு சாதனம் — 02
★ மொபைல் செட் — 01
★ ஜி. பி. எம். ஜி, முக்காலி — 02
★ 2 அங் ஷெல் — 73
★ 60 எம். எம். ஷெல் — 131
★ 60 எம். எம். பராசெல் — 52
★ ஆர். பி. ஜி. ஷெல் — 42
★ ஆர், பி. ஜி. புறப்ளர் — 32
★ பரா லைற் — 24
★ ரி - 81 ரைபிள் கிரெனட் — 27
★ 81 மோட்டார் ஷெல் — 07
★ டப்பி நிலக்கண்ணி — 221
★ கிளைமோர் (சிறியது) — 09
★ கிளைமோர் (பெரியது) — 02
★ கிளைமோர்வெடிக்கவைக்கும்கருவி — 09
★ 40 எம். எம். ஷெல் — 43
★ பீரங்கி ஷெல் — 05
★ ஏ கே. எல். எம். ஜி ரம் மகசீன் — 02
★ ரி, என் ரி. கிரனெட் — 29
★ சின்ன ஜே. ஆர். — 20
★ பெரிய ஜே. ஆர். — 03
★ புகைக்குண்டு — 03
★ ரி- 81 மகசீன் — 88
★ ரி 56- 2 மகசீன் — 31
★ ஜி3, ஏ3, மகசீன் — 36
★ 7. 62 நடுத்தர ரவைகள் — 83, 175
★ ஐ. எம். தொடர் ரவைகள் — 5, 646
★ நேட்டோ ரவைகள் — 4,307
★ நேட்டோரவைகள்(லிங்குடன்) — 6,877
★ 7.92 எம் எம். லிங்குடன் — 1,558
★ தண்ணீர்க்கான் — 17
★ தலைக்கவசம் — 50
★ சப்பாத்து (சோடி) — 350
★ உடுப்பு பாக் — 300
★ மழைக்கவசம் — 50
★ குண்டு துளைக்காத அங்கி — 75

## வரி விளம்பரம்

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5400)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

### ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்)

புத்தம்புதிய ஒலிவெற்றி தட்டச்சு இயந்திரம் (Oliviti Typriter English) விற்பனைக்குண்டு. கொழும்பு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், (Dilka Watch Works) பஸ் நிலையம். சாவகச்சேரி. (சி/5470)

### காணி விற்பனை

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 4 நாலு பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு தொடர்பு: வீ. த பாலசிங்கம் பலாலி வீதி, கோண்டாவில் (சி/3697)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம் றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

## ஓய்வு பெறவுள்ளவர்கள் விபரங்களை சமர்ப்பிக்குக

யாழ் மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் இருந்து ஓய்வு பெறுவோரின் விபரங்கள் அடங்கிய கோவையை யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்கும்படி யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் சகல ஓய்வு பெறுவோர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இது சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால் மேற்படி விபரங்கள் அடங்கிய கோவையை உரிய காலத்தில் சமர்ப்பிக்கும்படி அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

## கடற்படைத் தளபதிகொலை; 2000 தமிழர் விசாரணை

கொழும்பில் 300 தமிழர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோ சென்றவாரம் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 2000 தமிழர்கள் விசாரிக்கப்பட்டார்கள் இவர்களில் 300 பேரே காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலவச சீருடைகள் டிசம்பர் இறுதியில் வரும்

[கொழும்பு]

வடபகுதி மாணவருக்கான இலவச சீருடைகள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

இச் சீருடைகள் வரும் டிசம்பர் மாத இறுதி வாரத்திற்குள் அவ்வப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் சர்வதேச செஞ்சிலுவைக் கப்பல்மூலம் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் லொறி மூலமும் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து முல்லைத்தீவுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மூலமும் கிளிநொச்சிக்கு ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உத்தியோகஸ்தர்கள் மூலமும் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

## சித்த ஆயுர்வேத கல்லூரி மாகாணசபையின்கீழ் வரும்

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை வடக்கு-கிழக்குமாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சு பொறுப்பேற்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவ்வாறான ஏற்பாடுகள் யாவும் முடிவுற்றது. லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் அதிபர் குறிப்பிட்ட கருத்துக்கள் யாவும் உடனடியாக கருத்தில் எடுக்கப்படும் என வடக்கு. கிழக்கு மாகாண மாற்றுமுறை மருத்துவ சுகாதார மகளிர் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி மு உரோ மகேசன் யாழ் லங்கா சித்த ஆயுர்வேதமருத்துவக் கல்லூரி அதிபருக்கு கடிதமொன்றின் மூலம் தெரிவித்துள்ளார் (14)

### சம்பளம் இன்னுமில்லை

நெடுந்தீவில் இராணுவத்தினரின் கீழ் கடமை புரியும் கல்விப்பகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாமலிருப்பதாகவும், அங்குள்ள ஈ.பி. டி.பி.யினரும், இராணுவமும் நிர்ப்பந்திப்பதாக தெரியவருகிறது (17)


## கலை, வர்த்தகக் கல்லூரி

### C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை

## A/L 94 புதிய பிரிவு

### சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ | 8—9 |
| பொருளியல் | — திரு. உதயன் | 9—10 |
| வர்த்தகம் | — திரு இரட்ணம் | 10—11 |
| இந்து நாகரிகம் | — திரு. ஜோதீஸ்வரன் | 11—12 |
| அளவையியல் | — திரு. சயந்தன் | 1—2 |
| தமிழ் | — திரு. தங்கராசா | 8—9 |
| புவியியல் | — திரு வேலாயுதபிள்ளை | 12—1 |
| அரசியல் | — திரு. பஞ்சு | 7—8 |
| கிறிஸ்தவ நாகரிகம் | — செல்வி சாந்தி | 11—12 |

### ஆரம்பம்: 29. 11. 1992

குறிப்பு:

1. முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
2. பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அலகில் இருந்து ஆரம்பமாகும்.

★ விபரங்களுக்கு நேரில்

(சி/5412) —நிர்வாகி

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் - யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம)

### கல்வி ஆண்டு 1993

O/L மாலைநேர வகுப்புக்கள் (8.00 மணி - 6.00 மணி)

சனி-ஞாயிறு வகுப்புக்கள் [8.00மணி - 3.00மணி]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1906. 10. 17

ஆண்டவன் கரங்களில் 1991. 11. 25

### திரு. மருதன் அருளப்பு

(புலவர், விஷகடி வைத்தியர்)

சர்வ தயாபர யேசுவே!
இவ்வுலக வாழ்வினின்று உம்மிடம் அழைத்துக் கொண்ட இவரின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

க. ஆரோக்கியநாயகி
'அரசடி வீதி,'
நவாலி தெற்கு (3678)

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

## அழைப்பிதழ்

லெப். பிரசன்னா
(இரத்தினம் சதானந்தன்)
ஞாபகார்த்த



வைத்தியசாலை

### திறப்பு விழா

இடம் : பாரதிபுரம், கிளிநொச்சி

காலம் : 26-11-92 வியாழக்கிழமை
மு. ப. 11.00 மணி

அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 95, D, 10,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.
(3668)

ஐ. இரத்தினம்
அமைப்பாளர்
லெப். பிரசன்னா
ஞாபகார்த்த நிதியம்

## 31-ம்நாள் நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

### 1992-11-25

1984ஆம் ஆண்டு இதே தினத்தில், சுவரொட்டி ஒட்டப் போகும் போது தேசவ்ரோதிகளினால் படுகொலை செய்யப்பட்ட-

சிவா (சிவசுப்பிரமணியம் சிவகுமாரன்- மூளாய்தெற்கு- யாழ்.)

சின்னச்சிவா (சந்தையா சிவாநந்தன் - டச்சுவீதி, தொல்புரம் மேற்கு- யாழ்.)

ஈஸ்வரன் (சந்தையா யோகீஸ்வரன் - தொல்புரம் - யாழ்.)

## விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீகாந்தா அச்சகம்--புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3640)


## திறப்புவிழா

[சண்டிலிப்பாய்]

லெப்டினன்ட் தமபிராசா சிவானந்தன் (நந்தன) நினைவாக இன்று புதன்கிழமை சண்டிலிப்பாய் தும்பன் வீதியில் சனசமூக நிலைய திறப்புவிழா நடைபெற உள்ளது.

இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறபபிக்க உள்ளனர்.

### புதுக்குளம் சித்திவிநாயகர் முதலிடம்

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் சிறி முருகன் விளையாட்டுக்கழகத்தினரால் கடந்த 19-ம் திகதி நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வவுனியா மாவட்ட விஷேடதளபதி திருதேவன் பரிசில்கள் வழங்கினார்.

இந்தக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புதுக்குளம் சித்தி வினாயகர் விளையாட்டுக்கழகம் முதலாமிடம் பெற்றது.

அன்றைய தினம் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. (தி)


[8.00மணி - 3.00மணி]

ஆண்டு: 10, 9, 8, 7, 6

திறமையால் பிரபல்யமான திறமை அனுபவம் மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை

ஆரம்பம் :

5-12-1992(சனி) மாலை 3.00மணி

❋ அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி-5440)


## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு :
07 - 10 - 1917

இறப்பு :
07 - 12 - 1991

திதி:
25 - 11 - 1992
[புதன்கிழமை]

### பொன்னர் செல்லையா

இலங்கை இராணுவ பொம்மர் தாக்குதலால் கதிரிப்பாயில் மரணமடைந்தார்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி :
செ. நாகம்மா

பிள்ளைகள் :
ம. ஞானம்
செ. இராசேந்திரம்

மருமக்கள்:
க. மனோகரன்
இ. கீதா

பேரப்பிள்ளைகள் ;
ம. சுயந்தகன்
ம. காண்டீவன்
இ கிரிசா
இ. துவாரகன்

உற்றார், உறவினர்
விமான வீதி, தம்பாலை. (3660)



## லெப். நிரோச்

(உதயகுமார் றஞ்சித்குமார்)

(களுவன்கேணி வீதி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

உயிலங்குளம்-கரம்பைக்குளம்தொடர்காவலரண்மீதான தாக்குதலின்போது வீரச்சாவு அடைந்தார்.

வீரஜனனம்: 06 06-1978

வீரச்சாவு: 26-10-1992

மீன் பாடும் தேனாட்டின்
வீர மிகு மைந்தனே!
வரலாறு படைத்த மண்ணில்
வரலாறாகி விட்டாயே!
இன்றுன் பூதவுடல்
மறைந்து போகலாம்
நாளை புலரும் பொழுதில்
உன் பெயர்
பொன்னெழுத்துக்களால்
பொறிக்கப்படும்.

தகவல் ;
அந்தோனி குடும்பத்தினர்,
கட்டையடம்பன்,
மடுறோட்.

உன் பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அக்காமார்,
அண்ணாமார், தங்கைமார்.
(இ)

ஈஸ்வரன் (சந்தையா யோகீஸ்வரன் - தொல்புரம் - யாழ்.)

சிவம் (சிவசம்பு சிவராஜா - தொல்புரம் மத்தி - யாழ்.)

புவி (தர்மரெட்ணம் புவீந்திரன் -தொல்புரம், சுழிபுரம்- யாழ். )

தேவன் (விஸ்ணு தேவநாதன் - தொல்புரம் மத்தி- யாழ். )

1985ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ சி.சிவலோகமூர்த்தி (கடற்கரைச்சேனை, மூதூர்- திருகோணமலை)

1988ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளி.

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

லெப். லீனஸ் (எதிர்வீரசிங்கம் ரவீந்திரன்- கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை - யாழ். )

காங்கேசன்துறையில், சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து யாழ். வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய-

மகாராஜா (அருமைத்துரை இந்திரன்- நித்தியவெட்டை, வெற்றிலைக்கேணி- யாழ். )

திருக்கோணமலைப்பகுதியில், எமது முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த-

லெப். ஜெயபால் (கணபதி மாடாசாமி- பன்குளம் - திருகோணமலை)

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் பலியான மட்டு- கொடுவாமடு வாசியான தமிழ்த்தொழிலாளி.

1991ஆம் ஆண்டு மன்னார்- வெள்ளாங்குளம் பகுதியில், சிறிலங்காப் படையினர் விமானத்திலிருந்து நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 5- தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/5469]

# பலாலியில் வீரச்சாவடைந்தோர்




மேஜர்
தமிழரசன் (டொச்சன்)
கந்தசாமி ஜெயக்குமார்,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு




கப்டன் வியன்
நாகையா சுப்பிரமணியம்,
சாவகச்சேரி வடக்கு



கப்டன் பாசமலர்
கணபதிப்பிள்ளை புஸ்பலதா
சிறீ முருகன் குடியேற்றம்
தீருவில், வல்வெட்டித்துறை




கப்டன் மதன் (ஜிம்)
குமாரவேலு வினோதகுமார்,
நெடுந்தீவுமேற்கு, நெடுந்தீவு.




கப். முத்துச்செல்வன் (நேரு)
ஜெயாட்ணர் பாலச்சந்திரன்
நவக்கிரி, புத்தூர்.



கப்டன்
மலரவன் (லியோ)
காசிலிங்கம் விஜிநதன்- இராம
லிங்கம் வீதி, திருநெல்வேலி.




லெப்டினன்ட்
முக்கண்ணன் (உமா)
வெள்ளையா சிறிகரணன் -
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.




லெப்டினன்ட் லீலா
கந்தையா கலாஜினி
தம்பிராய், பூநகரி.



லெப்டினன்ட்
செல்வி (டில்லி)
மாரிமுத்து விக்கினேஸ்வரி
விநாடகபுரம், துணுக்காய்.




லெப்டினன்ட்
அழகையா (கெனடி)
தேவராஜ் ஜோன்சன், ஆட்
காட்டிவெளி, வட்டக்கண்டல்
மன்னார்.



லெப்டினன்ட் கௌசி
கணபதிப்பிள்ளை பவானி
கும்புறுமூலை, மட்டக்களப்பு



லெப்டினன்ட்
மலரவன் (மன்சூர்)
நல்லதம்பி ஞானசேகர் -
தோப்பு, அச்சுவேலி.



லெப்டினன்ட்
நாவேந்தன் (டேவிட்)
ஞானப்பிரகாசம் ஜெயபாலன்
-அன்னை வேளாங்கண்ணிவீதி,
பாலையூற்று திருமலை.



லெப்டினன்ட்
லிங்கம் (ரமணலிங்கம்)
இராசேந்திரம் பாஸ்கரன் -
பாரதி வீதி, சம்பர்மலை, வல்
வெட்டித்துறை.



லெப்டினன்ட்
அமுதா (நிரோசா)
மருசலீன் கெலன்
புலோப்பளை, பளை



லெப்டினன்ட்
இறை அமுதன் (சிந்து)
சபாரத்தினம் விஜயகுமார்,
10-ம் வட்டாரம், புதுக்குடி
யிருப்பு, முல்லைத்தீவு.



லெப். அருந்ததி
சிவசுப்பிரமணியம் சாந்தகி
பஞ்குடாவெளி செங்கலடி.



லெப். விஜித்தா
அந்தோனிப்பிள்ளை
மேரி மெல்டா
செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று



லெப்டினன்ட்
இளநிலா (பார்த்திமா)
நடராஜா சிவா
தண்ணீரூற்று முள்ளியவளை



லெப். ஜெயசுபா
தேவநாயகம் ஜெயசீலன் -
மஞ்சம் தொடுவாய், கொலனி,
மட்டக்களப்பு.




லெப்டினன்ட்
திருவருள் (ஜே சேப்)
சின்னத்துரை கிருஸ்ணானந்
தன் - குடம்பியன் வரணி,
யாழ்ப்பாணம்.

லெப். கனகேஸ்
இரத்தினம் வில்க்குமார் - சிவ
புரம் கிரான்சி, மன்னார்.



2ம் லெப். கௌரி
வீரகத்தி அமுதினி
சர்வோதயா வீதி, ஆவரங்
கால் புத்தூர்.







2ஆம் லெப்டினன்ட்
விக்னேஸ்வரன் (விக்கி)
வைரமுத்து சிவராசா - தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.



2ம் லெப்டினன்ட்
துரியோதனன் (யசி)
மகாலிங்கம் ராஜீஸ்வரன் - கோப்பாய் வடக்கு, கோப்பாய்.



2-ம் லெப்டினன்ட்
அரசன் (ராஜ்)
முத்து ஜீவச்சந்திரன், செட்டிகுளம், வவுனியா.



2ம் லெப்டினன்ட்
நல்லதம்பி (பகீர்)
அரியகுட்டி தேவதாசன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு



வீரவேங்கை
ஆவர்த்தனா
ஜேசுதாசன் ஜெனிற்றா
பன்சால் வீதி, யாழ்ப்பாணம்



வீரவேங்கை வேணி
விவேகானந்தம் கௌரியம்மா
மான்உருவி ஓட்டிசுட்டான்.




வீரவேங்கை பட்டு
குமாரசாமி சந்திரமதி
வேரவில் பூநகரி



வீரவேங்கை
கதிரவன்
கற்கண்டு விஜயலக்குணம்,
விழிசுட்டி, சங்கானை.



வீரவேங்கை
பாக்கியம்
அரசரத்தினம் வனஜா
வேலணை கிழக்கு, வேலணை



வீரவேங்கை
சந்திரா
குணரத்தினசிங்கம் கவிதா
அம்பன், குடத்தனை.



வீரவேங்கை மேனன்
நவரட்ணம் இம்மானுவேல் -
சிலாவத்துறை மன்னார்.



வீரவேங்கை
கவியரசி (வனிதா)
பாலகிருஷ்ணன்
கமலசுலோசினி
புன்னைநீராவி, விஸ்வமடு



வீரவேங்கை
சுனிஸ்ரா
குணரத்தினம் சுகுணசுந்தரி
பண்டிதர் குடியிருப்பு,
கெற்பலி, மிருசுவில்.



வீரவேங்கை
கீர்த்தி
சந்தான் மேரிதிரேசா
சிறுகண்டல், முருங்கன்



வீரவேங்கை
மாயவன்
தர்மசிங்கம் சிறீதரன், 5ம் வட்டாரம், திரியாய், திருக்கோணமலை.




வீரவேங்கை
அரவிந்தா (கௌசலா)
அழகதுரை சுகந்தி, பாண்டியன்
குளம் வவுனிக்குளம்.




வீரவேங்கை
இசைக்கோண்
சிவசாமி கண்ணன்
அல்வாய் மேற்கு, அல்வாய்.



வீரவேங்கை
நகையன் அன்ரு
தேவராஜா ஜேசுநேசன்.
பிறஸ் றோட், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.



வீரவேங்கை
திலைச்செல்வன்
(ரகுபதி)
சின்னப்பொடி கவிரஞ்சன்,
6-ம் யூனிட், இராமநாதபுரம்.



வீரவேங்கை
சிவம் (சிவனேஸ்)
யாக்கப்பு புஸ்பமலர்,
திக்கம் அல்வாய் மேற்கு.



வீரவேங்கை சக்தி
சுந்தரலிங்கம் சுதர்சினி
பண்டான், கரணவாய்
தெற்கு கரவெட்டி



வீரவேங்கை
வீரமணி
மகாலிங்கம் சுதர்சன், மட்டுவில் தெற்கு, சாவச்சேரி.



வீரவேங்கை
குலேந்தினி
முத்துராஜா சரோஜினி
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

பலாலி இராணுவ முகாமின் கிழக்கு எல்லைக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 11.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தினர். இத்தாக்குதலின்போது 46 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இக்கணைக்கு

நீ நிமிர்ந்து நிற்கும்வரை உன் நிழல் கோணலாக இருந்தாலும் அது பற்றிக் கவலைப்படாதே.

— சீனப்பழமொழி


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 25- 11- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


# எதிரிகள் போற்றும் புலிகளின் வீரம்

“தியாகம், யுத்தம் செய்யும் முறை துணிச்சல் இவற்றை விடுதலைப் புலிகளிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்” இவ்வாறு சிறிலங்கா பாராளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா விடுதலைப் புலிகளுக்கு புகழாரம் சூட்டினார். மேலும், ‘‘அரசிற்கெதிரான கிளர்ச்சியில் ஜே. வி. பியினர் ஒரு சயனைட் வில்லையைக் கூட கழுத்தில் அணியவில்லை’’ என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழப பிரதேசத்தில் மாவீரர் வாரம் சிறப்பாக அநுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், சிங்களப் பாராளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ள பாராட்டானது மிகவும் பொருத்தப் பாடானது என்பதில் எதுவித மிகைப்படுத்தலும் இல்லை.

தமிழீழப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் விடுதலைப் புலிகள் இரு நாட்டு இராணுவத்துடன் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகப் போராடியுள்ளார்கள். இப்போராட்டங்கள் தரையிலும்,கடலிலும் இடம் பெற்றுள்ளன. இப்போராட்டத்தில் விடுதலைப் புலிகள் புரிந்த சாதனைகள் பல. இதற்கு அவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு என்பவையே முக்கியமான காரணங்களாகும். இவற்றின் காரணமாக காலத்திற்குக் காலம் எதிரிகளாலும் விடுதலைப் புலிகள் பாராட்டப்பட்டு வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவத் தளபதிகளில் சிலர் அவர்களின் இலட்சியப் பற்று, சளைக்காத முயற்சி என்பன குறித்து பாராட்டுத் தெரிவித்துள்ளனர். வன்னிக் காடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்ட இந்திய விசேட அதிரடிப் படைக்குத் தலைமை தாங்கிய அர்ஜுன் கட்டோச் “வவுனியாக் காடுகளில் வந்திறங்கிய காலாட் படையினரும், பரா இராணுவத்தினரும், விடுதலைப் புலிப் போராளிகள் அவர்கள் ஆண்களாக இருந்தாலென்ன, பெண்களாக இருந்தாலென்ன மதிப்பு வைக்கத் தவறமாட்டார்கள்” என்றார்.

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு,

# தொண்டமானின் சொல்லுக்கு ஆமாப்போட்டு செயற்படுகிறது அரசு

## சு. கட்சி எம். பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தொண்டமானின் சொல்லுக்கு எல்லாம் அரசு ஆமாம் போட்டுவருகிறது. இதனால் சிங்கள இனம் அவமானப்படும் அளவுக்கு ஆளாகின்றது எனக்காலிமாவட்ட சுதந்திரக் கட்சிஎம்.பியான நொயல்பத்ம சிறிகாரியவசம் கூறினார்.

அம்பலாங்கொட பகுதியில் நிகழ்ந்த பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; புதிய வாக்குகளைப் பெறவேண்டும் என்ற நப்பாசையினால் அரசு இவ்வாறு நடந்துகொள்வதாகவும், ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு எப்போதோ தீர்வு கண்டிருக்கலாம் என்றும், இந்த யுத்தத்தை அரசாங்கம் தனது நன்மைக்காகவே தொடர்ந்து நடத்துகின்றது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் வாழ்க்கைச் செலவை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றனர் ஆனால் அரசாங்கத்தின் கேளிக்கைகளுக்கும் விரயங்களுக்கும் குறைவே யில்லை.

அரசாங்கம் இன்று யுவதிகளுக்கும் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை வழங்கி வருகிறது இளைஞர்களுக்கோ யுத்த களத்திலேயே வேலை வழங்கி வருகிறது என அவர் தெரிவித்தார்.

# 51 குடும்பங்களுக்கு ஒரேதினத்தில்திருமணப்பதிவு

[கரவெட்டி]

கரணவாய் அண்ணாசிலையடி கிராமத்தில் சட்டரீதியான திருமணப்பதிவின்றி குடும்பமாக வாழ்ந்து வந்த 51 தம்பதியினருக்கு யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் ஒரே நாளில் திருமணப்பதிவுகளை நடாத்தி வைத்தது.

அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தில் வைத்து வடமராட்சி விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் தம்பிமுத்து அரிபிரசாதம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி திருமணப்பதிவுகளிற்கான சான்றிதழ்கள் அதே வள்ளுவர் சனசமூக நிலையத்தில் வைத்து பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. க. மாணிக்கவாசகம் வடமராட்சி தெ/மே பிரதேசசபை செயலர் திரு.க. இராமலிங்கம் ஆகியோரால் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தின் போது பதிவாளர் அரிபிரசாதம் உள்ளூராட்சி திணைக்கள ஆய்வாளர் திரு க. இராசையா, வடமராட்சி தெ/மே சனசமூக நிலையங்களின் சமாச செயலாளர் திரு. கொ. குணசிங்கம், கிராம சேவையாளர் திரு. க. இரத்தினம் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

இத்தகைய திருமணப்பதிவுகளிற்கு ஒவ்வொரு தம்பதியினர் சார்பாகவும் பதிவாளருக்கு ரூபா 500 வழங்கப்படுகின்றது என முன்பு தெரிவிக்கப்பட்ட தகவல் தவறானாது எனவும் ஒன்றாக நடாத்தப்படுகின்ற அனைத்துப் பதிவுகளிற்கும் சேர்த்து சிறு ஊக்குவிப்பாக ரூபா ஐந்நூறு வழங்கப்படுகின்றது என்பதே சரியான தகவல் எனவும் திரு. அரிபிரசாதம் தெரிவித்தார் 06

# திருமலை மாவட்டத்தில் 6 தமிழர் படையால் கைது

(திருகோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் கட்டைபறிச்சானிலிருந்து மூதூருக்குச் சென்றுகொண்டிருந்த ஆறு பொதுமக்கள் கடந்த 15 ஆம் திகதியன்று ஜி. பி. எஸ். இராணுவ முகாமில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

முதலாம் வட்டாரம் கடற்கரைச் சேனையைச் சேர்ந்தவர்களான அன்புதாஸ்மேகலா (வயது 24), சந்திரன் கிருபமலர் (வயது 20), சங்கர் சிவராணி (வயது 19), தம்பையா நாகேந்திரன் (வயது 42), கைலாசபிள்ளை தங்கப்பிள்ளை (வயது 65), மற்றும் மூதூர் மாதாகோவில் அகதி முகாமைச் சேர்ந்த நாதன் ஜெயராணி (வயது 28) ஆகியோரே இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

# தீவுப்பகுதியிலிருந்து திருமலைக்கு கப்பல் சேவை

திருமலையிருந்து தீவுப் பகுதிக்கான கப்பல் சேவை நேற்று முன் தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பல் வாரமொரு முறை தனது சேவையை நடாத்த உள்ளதாகவும்,முதல் சேவையி லீடுபடுத்தப்பட்டதாகவும், மானிய அடிப்படையிலேயே பயணக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் பயணம் செய்வோர் ஊர்காவற்றுறை, கோவளம், காரைநகர் பகுதிக

## விக்ரோறியா கல்லூரியில் மரணச்சடங்குகள்

சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி நேற்று முன்தினம் மரண வீடாகியது. இப்பாடசாலையில் நான்கு பொது மக்களது பூதவுடல்கள் வைக்கப்பட்டு மரணச்சடங்குகள் நடாத்தப்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தினர் சுழிபுரம் பகுதிமீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட நான்கு பொது மக்களின் பூதவுடல்கள் இப்பாடசாலைக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு வைத்து மரணச் சடங்குகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து தகனத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டன. இதனால் இப்பாடசாலை இயங்கவில்லை.

[சு]

## ‘‘எமது வானிலை’’ கருத்தரங்கு

‘‘எமது வானிலை’’ என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக் கழகப் புவியியல் விரிவுரை மண்டபத்தில் இன்று மாலை 3-00 மணியளவில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள் மேற்படி தலைப்பில் கருத்

## தாகம் தணியும்...

எங்கள் கனவு நனவாகும்
எதிரியின் பாசறை நீறாகும்
சங்கம் வளர்த்த தமிழின் மகுடம்
செங்கோல் நீதிவழி ஆளும்

செந்தமிழ் ஈழம் பிறந்துவிடும்
தேசத்தில் மானிடம் நிமிர்ந்து நிற்கும்
விந்திய மலையும் நம்தமிழர்
வீரத்தின்முன் தலை தாழ்ந்து நிற்கும்

தேசம் தன்னின் விடுதலைக்குத் தம்
தேகம் தந்தவர் மாவீரர்
தாகம் தணியும் தமிழீழத்
தாயக மண்ணின் ஒளி தெரியும்

மானத் தமிழரின் வரலாறு
மண்ணில் மீண்டும் தளைத்துயரும்
வானைத் தழுவும் சோழன் கொடி
வையம் போற்றும் புலியின் கொடி

- நெடுந்தீவு லக்ஸ்மன்

# பூநகரிப் பகுதியில் மாவீரர் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இன்று பூநகரிப் பகுதியில் மாவீரர் வாரத்தை யொட்டி சாமிப்புலம், நல்லூர், ஆலங்கேணி, செல்வபுரம், செம்பன் குண்டு ஆகிய பகுதிகளில் மரம் நாட்டும் வைபவம் நிகழ உள்ளது.

நாளை நல்லூரில் அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் பந்தலுக்கு மாவீரர் பெற்றோர் அழைக்கப்பட்டு அவர்களைச் சௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து நல்லூர் அம்மன் ஆலயத்திலும், ஆலங்கேணி கட்டுக்கரைப் பிள்ளையார் ஆலயத்திலும், பத்தினிப்பாய் கந்தசுவாமி ஆலயத்திலும் நள்ளிரவு 12-02 மணிக்கு நினைவொலி எழுப்பப்படும்.

கார்த்திகை 27-ம் திகதி பிற்பகல் 5-05 மணியளவில் கொடி இறக்கும் வைபவம் இடம் பெறும்.

# மாவீரர் வாரத்தையொட்டிய சிரமதானப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தையொட்டி யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்கள், 2-ம் படி சங்கங்கள், யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களங்கள் ஆகியன இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்ள உள்ளன.

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்திலும், சாவகச்சேரி, கொடிகாமம், பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இணைந்து அரசினர் வைத்திய சாலையையும், சாவகச்சேரி, கொடிகாமம், தெங்கு பனம்பொருள் சங்கங்கள் சங்கக் காரியாலயத்தையும் துப்புரவு செய்ய உள்ளன.

சாவகச்சேரி, நகரசபை சிறுவர் பூங்கா அமைக்கவிருக்கும் இடத்தைத் துப்புரவு செய்ய உள்ளது. வலிதெற்கு—மேற்குப் பிரதேசசபை அதிகார் செல்லமுத்து விளையாட்ட[illegible] கொள்ள உள்ளது.

வலி மேற்கு பிரதேசசபை செட்டியார்மடம், கல்லுண்டாய் வீதி, அராலி-யாழ்வீதி, வட்டுக்கோட்டை-அராலிவீதி சங்கானை பஸ்நிலையம், மரக்கறிச்சந்தை, மீன்சந்தை ஆகியன துப்புரவு செய்யப்படும்.

வலி- வடக்கு பிரதேசசபையினால் பிரதேச சபை தலைமையலுவலக, உபஅலுவலக சுற்றாடல்கள், காரியாலய கட்டடங்கள், தும்புதொழிற்சாலை, இடம் பெயர்ந்தோர் முகாம் வளவு சுற்றாடல், மல்லாகம் மயானம், மயான ஒழுங்கை என்பன துப்புரவு செய்யப்பட உள்ளன.

சாவகச்சேரி பிரதேசசபை புத்தூர் சந்தி—கொடிகாமம், (கண்டிவீதி) மிருசுவில்-எழுதுமட்டுவாள் என்பன துப்புரவு செய்யப்பட உள்ளன.

யாழ். காப்புறுதி கூட்டுத்தாபனம், மின்சார சபை,

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு. ஒழுக்கம் என்பனவற்றைப் பாராட்டி, அதனைப் பின்பற்றி நடக்குமாறு இராணுவத்திற்கு ஓர் கைநூலும் விநியோகித்திருந்தார். தற்பொழுது சிறிலங்கா பாராளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகர் புலிகளின் திறமை, துணிவு குறித்தும் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எதிரிகளால் பெறப்படும் பாராட்டுக்களில் பெரும் பாகம் தமிழீழப் போரில் மாவீரர்களாகிய விடுதலைப் புலிகளுக்கே உரித்தானதாகும். அவர்கள் புரிந்த தியாகமே இன்று இப்பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவதற்கு முக்கிய காரணமாகும். கடந்த பத்து வருட காலத்தில் சுமார் 5000 போராளிகள் தமது உயிரைத் தற்கொடை செய்தே இப்பெருமையை புலிகளுக்கும், தமிழினத்திற்கும் பெற்றுத் தந்துள்ளார்கள்.

இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு இல்லாவிட்டால் தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டமும், தமிழ் இனமும் சிங்களப் பேரினவாதத்தினால் இன்று அழிக்கப்பட்டு இருக்கும் அல்லது இந்திய ஏகாதிபத்தியம் தனது நலனுக்காக தமிழ்த் தேசிய இனத்தை அரசியலில் பகடைக் காயாக ஆக்கியிருக்கும்.

விடுதலைப் புலிப் போராளிகள் புரிந்த அர்ப்பணிப்புக்கள் போன்று உலகில் வேறு எந்த விடுதலை அமைப்பும் இதுவரை அர்ப்பணிப்புக்கள் செய்ததாக வரலாறு இல்லை. சிறிலங்காவில் இரு தடவைகள் கிளர்ச்சியில் ஈடுபட்டு சுமார் ஒரு லட்சம் பேரைப் பறிகொடுத்த (உறுப்பினர்கள் + ஆதரவாளர்கள்) ஜே. வி பி. இயக்கத்தில் ஒருவர் கூடத் தமது இலட்சியத்திற்காக துணிவுடன் தம்முயிரைத் தற்கொடை செய்யத் தயாராக இருக்கவில்லை. ஆனால் ஆயிரக்கணக்கில் எதிரியின் கையில் சிக்கி அழிந்து போனார்கள். எதிரி ஈவு இரக்கமின்றி படுகொலை செய்தான். மாறாக, ஜே வி. பி யினரில் ஒரு சிறுபகுதியினர் தானும் தம் உயிரைத் தற்கொடை செய்யத் தயாராக இருந்திருப்பின் இன்றைய சிறிலங்காவின் நிலையே வேறு விதமாக இருந்திருக்கும்.

இன்று எதிரியின் கணிப்பீட்டில் கூட 'வெல்ல முடியாதவர்கள்' என்ற நிலைக்கு விடுதலைப் புலிகள் உயர்ந்துள்ளார்கள். இதேவேளை உலகில் துணிவு, வீரம் அர்ப்பணிப்பு என்பனவற்றிற்கு விடுதலைப்புலிகளே இலக்கணமாகவும் மாறியுள்ளார்கள். இந்நிலையில் துணிவு, வீரம், அர்ப்பணிப்பிற்கு விளக்கம் கூற முற்படும் எதிரி கூட புலிகளைப் பாராட்ட வேண்டியது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

முறை தனது சேவையை நடாத்த உள்ளதாகவும், முதல் தடவையாக நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'நியூகோராம்' எனும் பெயரிலான சிங்கப்பூர் கப்பலே வோர் ஊர்காவற்றுறை, கோவளம், காரைநகர் பகுதிகளிலேயே இறங்க முடியும்

இக் கப்பல் சேவையை ஒரு தடவை நடத்த 77.000 ரூபா முடிவதாக தெரிவிக்கப் படுகிறது.

கடலகவள பாடநெறி;

## ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்குவதற்கு ஏற்பாடு

1993 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு 4, 5, 7, 8 ஆம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட உள்ள கடலகவள பாடநெறியினை சிறப்பாக கற்பிக்கும் ஆசிரியருக்கு கோட்டரீதியிலும், இவ்வலகுகளில் நிகழ்த்தப்படும் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்குப் பாடசாலை ரீதியிலும் பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக் கடலகவள பாடத்திட்டத்துக்கான பாடநெறி தொண்டமானாறுவெளிக்கள நிலையத்தினரால் தயாரிக்கப்பட்ட பதினைந்து கற்றல் நிகழ்ச்சிகளில் இருந்து மாணவர்க்கு இப்பாட நெறியில் ஆர்வமூட்டக் கூடியதாகவும், வாழ்க்கை முறைக்குப் பயன்படக் கூடியதுமான பத்து கற்றல் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் 4, 5, 7, 8 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் புகுத்தப்படும் இப் பாடநெறி ஆண்டு 9 இல் கடலகவள பாடமாக தனிப்பாடத்திட்டத்தின் படி கற்பிக்கப்படும்.

இக் கடலகவளம் தொடர்பான பயிற்சி நெறி யாழ் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் 19 ஆம் 20 ஆம் திகதியில் சகல விஞ்ஞான, சமூகக்கல்வி ஆலோசகர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறை வெளிக்கள நிலையத்தால் தினமும் 8 30 — 4.30 வரை நடாத்தப்பட உள்ளதாகவும் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (17)

## பொலிஸில் பெயர் பதிய அரசாங்கம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமது பெயரைப் பதிய வேண்டும் என்ற புதிய சட்டத்தால் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டையும் சோதனை செய்து பார்க்க பொலிசாருக்கு வசதியில்லாத நிலையில் இந்த நடவடிக்கையைச் செயற்படுத்துவது கடினம் என்று பி. பி ஸி. தெரிவிக்கிறது. குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தடுக்கப்படும் என்று கூறுவதும் சந்தேகமே என்றும் அச்செய்தி கூறுகிறது.

பொதுமக்கள் அனைவரும் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்ற விதியும் பொலிஸ் அதிகாரிகளைக் குளப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

செ. பாலச்சந்திரன் அவர்கள் மேற்படி தலைப்பில் கருத்துரை வழங்க உள்ளார். இக் கருத்தரங்கைப் புவியியற் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

## அலங்கார வளைவு வீதிகளில் மின்னொளி

வலிகாமம் வடக்கில் மாவீரர் வாரம் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுன்னாகம் நகரப் பகுதியில் கவர்ச்சிகரமான, போக்குவரத்து கட்டுப்பாடுக் கூண்டொன்று அமைக்கப்பட்டு மின்னொளியால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. நகரத்தின் நாலு நுழைவாயில்களிலும் பெரியளவிலான அலங்கார வளைவுகளைச் சுன்னாகம் வர்த்தகர் சங்கம் அமைத்துள்ளது.

உடுவில் பிரதேசத்தில், இராமநாதன் கல்லூரியில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இணுவில் பகுதியில், வலிகாமம் வடக்கில், மற்றும் வலிகாமம் மத்திய பகுதிகளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தாவடிப் பகுதியில், தாவடி பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக, மாவீரர்களின் உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள கலையரங்கில் தினமும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு, சுன்னாகம், ப. நோ. கூ. சங்கம், மாணவர்கள், மற்றும் பொதுமக்களுக்கிடையில் கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளை இன்றும் நாளையும் நடாத்த உள்ளது

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று பண்டத்தரிப்பு கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

குப் பிரதேசசபை அதிகார் செல்லமுத்து விளையாட்டரங்கமும் சுற்றாடலும், மானிப்பாய் கிராம உப அலுவலக வளவினையும் துப்புரவு செய்ய உள்ளது நல்லூர் பிரதேசசபை கொக்குவில் ஆடியபாதம் வீதியை துப்புரவு செய்ய உள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை நெல்லியடி அலுவலக சுற்றுப்புற சூழலை துப்புரவு செய்ய உள்ளது.

யாழ் மாநகர சபை 100 தென்னங் கன்றுகளை நாட்ட உள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபையினால் வல்லை கொல்கள சுற்றாடலில் உள்ள கழிவுகளை அகற்றுதல், அச்சுவேலி அலுவலக வளவைத் துப்புரவு செய்தலும் மரம் நடுகையும் மேற்

தாபனம், மின்சார சபை, விலைமதிப்பீட்டுத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், சுன்னாகம் தேசிய சேமிப்புவங்கி, நெல்லியடி, சாவகச்சேரி இலங்கை வங்கி, சாவகச்சேரி மக்கள் வங்கி, கைதடி கமநல சேவை நிலையம், மிருசுவில் அஞ்சலகம் கோப்பாய், நல்லூர், உடுவில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களும் தத்தமது முன்புற அலுவலக வளவுகளை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்ய உள்ளன.

கோப்பாய் அஞ்சலகம் அலுவலக வளவை துப்புரவுசெய்வதுடன் மரம் நடுகையையும் மேற்கொள்ள உள்ளது.

## கோட்டரீதியாக 4-ம் நாள் மாவீரர் வாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி கோட்ட மட்டத்தில் நடைபெறும் கூட்ட விபரங்கள் வருமாறு;

வலிகாமம் கோட்டத்தில் கோப்பாய் வட்டத்தில் உரும்பராய் சைவத் தமிழ் பாடசாலையிலும், சண்டிலிப்பாய் வட்டத்தில் மானிப்பாய் கட்டுடை சுபாஸ் சனசமூக நிலையத்திலும் கூட்டம் நடைபெறஉள்ளது.

வடமராட்சிக் கோட்டத்தில் இருதயாக் கல்லூரியில் (மழைஎனின் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) திரு. வேந்தன் தலைமையில் கூட்டம் நடைபெறஉள்ளது.

## நெடுங்கேணியில் இரு தமிழர் படையினரால் சுட்டுக்கொலை

நெடுங்கேணிப் பிரதேசத்தில் பட்டிக்குடியிருப்பு பகுதியில் உள்ள வயல் குடியிருப்பு என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் வயது முதிர்ந்த கணவனும் மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

டொலர், கென் பண்ணைகளிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்த இந்த முதியவர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 19ஆம் திகதி இடம் பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்தவர்களின் பெயர், விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேசமயம், மேற்குறிப்பிட்ட இராணுவ முகாம்களிலிருந்து நெடுங்கேணியில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களை நோக்கி எறிகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது. (தி)

ஈழநாதம்

# மணலாற்றில் மின்வேக அதிரடி; 6 இராணுவத்தினர் பலி; பலர் காயம்

[மணலாறு]

மணலாறு பகுதியில் நேற்றுக் காலை 6 30 மணியளவில் இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மின் வேக அதிரடித் தாக்குதலில் ஆறிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத்தாக்குதல் பற்றி மேலும் தெரியவருவதாவது, சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கு அண்மையில் அமைந்திருந்த காவலரண்கள் மீதே விடுதலைப் புலிகள் இவ் மின் வேக அதிரடித் தாக்குதலை நடாத்தினர். மூன்று நிமிடங்கள் மட்டுமே நீடித்த இத் தாக்குதலினால் ஆறிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். காவலரண்களிலிருந்த இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

| | |
|---|---|
| ★ ரி56 -1 ரகதுப்பாக்கிகள் | — 04 |
| ★ ரி56 -2 ரகதுப்பாக்கிக்கள் | — 02 |
| ★ நடுத்தர ரவைகள் | — 512 |
| ★ ரி56 மகசீன் | — 23 |
| ★ ஏ.கே.கோல்சர் | — 06 |
| ★ தலைக்கவசம் | —01 |

## சுதந்திரப் போராட்ட வரலாற்றின் காவிய நாயகர்கள் மாவீரர்

எமது மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்ட வரலாற்றில் ஓர் புதிய திருப்பத்தை. ஓர் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது எமது இயக்கமாகும்.

எமது மக்கள் மீது அநீதி இழைக்கப்பட்டபோது. அதர்மம் இழைக்கப்பட்டபோது, எமதுநிலம் ஆக்கிரமிக்கப்பட்ட போது. அபகரிக்கப்பட்ட போது நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்.

எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக, எமது குழந்தைகளின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக, எமது இனத்தின் நிரந்தர விடுதலைக்காக நாங்கள் ஆயுதப் போராட்டப் பாதையை வரித்துக் கொண்டோம்.

இதனடிப்படையில் தான் 1972-ம் ஆண்டு ''புலிகள்'' இயக்கம், தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய ஒழுக்க மரபுகளின் நெறிப்படுத்தலில் நாட்டுப்பற்று, வீரம், தியாகம், அர்ப்பணிப்பு ஆகிய உயரிய பண்புகளுடன் எமது தலைவர் வே. பிரபாகரனின் உன்னதமான வழிநடத்தலின் கீழ் அணிதிரண்ட ஆயிரமாயிரம் போராளிகள் தமிழீழசுதந்திரப் போரை வெற்றியின் திசையில் முன்னெடுத்தார்கள்.

இன்று. தமிழீழ சுதந்திரப் போரின் வளர்ச்சி என்பது, தமிழீழ தேசிய விடுதலை இராணுவமான தமிழீழவிடுதலைப் புலிகளின் வளர்ச்சியைத்தான் குறித்து நிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இச் சுதந்திரப் போரானது, இன்று முழு மக்களையும் தன் கீழ் அணிதிரட்டிய ஓர் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகப் பரிணமித்திருக்கின்றது. இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பத்திரிகையில் மேலும்; அளப்பரிய அர்ப்பணிப்பு, மகத்தான தியாகம், உன்னதமான வீரம். அசையாத மன உறுதி என்பவற்றின் ஒன்றிணைந்த பிரதிபலிப்புகளாக தமிழீழத் தாயின் மடியில் வீழ்ந்துவிட்ட அவரின் 5 000 க்கு மேற்பட்ட புதல்வர்கள் எங்கள் சுதந்திரப்போர் வரலாற்றின் காவிய நாயகர்களாக ஒளிர்கிறார்கள்

ஆயிரமாயிரம் இனிய கனவுகளைச் சுமந்து கொண்டிருந்த தங்கள் இளமை வாழ்வை தமிழீழம் என்ற புனிதத் தாயிற்கு அவர்கள் காணிக்கையாக்கினார்கள்.

மக்களிலிருந்து பிறந்து. மக்களிற்குள்ளிருந்து வளர்ந்து, மக்களுக்காக வாழ்ந்த அவர்கள் மக்களுக்காகவே மரணிப்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள். பெருமைப்பட்டார்கள்; திருப்தியடைந்தார்கள்.

எமது புரட்சி இயக்கத்தின், புனித இலட்சியமான சுதந்திர சமதர்ம தமிழீழம் மீட்க விலையாகச் சென்றுவிட்ட எங்கள் வரலாற்று நாயகர்களை நினைவுகூரும் தமிழீழ மாவீரர் நாளாக, போர் முனையிலே முதன் முதலில் களப்பலியாகி லெப்டினன்ட் சங்கரின் நினைவு நாளான ''கார்த்திகை 27''ம் திகதியை எமது இயக்கம் பிரகடனப் படுத்தியது. அந்த மாவீரர் நாளில்.

என்றென்றும் அணையாமல் எங்கள் ஆன்மாவில் எரிந்து கொண்டிருக்கும் அந்த தியாக தீபங்களுக்கு உளமார்ந்த நினைவுகளுடன் வீரவணக்கம் செலுத்துவோம் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குடியிருப்பு மீது எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை. தெருடாவில் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள்மீது நேற்று முன் தினம் நள்ளிரவுவேளை எறிகணைத் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 1-00மணிமுதல் மூன்றுமணிவரை மேற்பட்ட எறிகணைகள் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்டன. இவை தீருவில் ஆதிகோவிலடி கம்பர்மலை, சமரவாகு பகுதிகளிலும் தெருடாவில், ஊரிக்காடு. ஆகிய இடங்களிலும் வீழ்ந்து வெடித்தன. ஆதே வேளை வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன. (யோ)

## கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை நடைபெற இருந்த விவசாய இணைப்புக்குழுக் கூட்டமும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டமும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதில் விவசாய இணைப்புக் குழுக் கூட்டம் காலை 10 00 மணிக்கும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் 11.30 இற்கும் நடைபெறும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மாணவர் அணிவகுப்பு

இன்று பி.ப. 4.00 மணியளவில் கோட்ட ரீதியாக ஐந்து இடங்களில் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் ஆண், பெண் மாணவர்களின் அணிவகுப்புக்கள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன. இவற்றில் வலிகாமக் கோட்ட மாணவர்களின் அணிவகுப்பு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் மானிப்பாய் கட்டுடை சுபாஸ் சனசமூக மைதானத்திலும் சித்தன் கேணி பிள்ளையார் கோவில் முன்றலிலும்: தென்மராட்சிக் கோட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், வடமராட்சியில்நெல்லியடிமத்திய மாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து மாவீரர் வார நினைவுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## மீனவர்மீது தாக்குதல் சிலரை காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்மீது கலிபர் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர்.

நேற்று காலை 4-30 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த கடற்படையினரே மேறபடி தாக்குதலை நடாத்தினர்.

இதனால் சில மீனவர்களைக் காணவில்லை எனத் தெரியவருகிறது. சில மீனவர்கள் தப்பி கரையையடைந்தனர். (யோ)

## கார் கடத்தல் துப்பாக்கிச் சூடு; கொழும்பில் பதற்றம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற இருவேறு சம்பவங்களினால் அங்கு பதற்றம் நிலவுவதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

ஒரு சம்பவத்தில் வாகனம் நிறுத்துமிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கார்கள் திருடப்பட்டுள்ளன, இக் கார்களை குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தலாம் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. அத்துடன் இவ்வளவு பாதுகாப்பு மத்தியிலும் இச்சம்பவம் நடந்ததையிட்டு அவ்வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

மற்றொரு சம்பவத்தில் தடைகளை மீறிச்சென்ற கார் ஒன்றின் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காரில் பயணம் செய்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் தப்பி ஓடிவிட்டார் என பி பி, சி. மேலும் அறிவித்தது

## குறுகிய

வரை நடைபெற்ற இந்த யுத்தத்தை சிறிலங்கா இராணுவத்தினர் எதிர் கொள்வதற்கு கனரக ஆயுதங்களையும், யுத்த டாங்கிகளையும், உலங்கு வானூர்திகளையும் பயன்படுத்தியது எனினும் பலத்த இழப்புக்களை இராணுவம் சந்திக்க வேண்டி ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நேரத்தை சீர்படுத்தவும்

26 ஆம் திகதி இரவு 12 மணி 01 செககனுக்கு மாவீரர் நினைவாக தமிழீழமெங்கும் சம காலத்தில் ஒரே சீராக அனை

## ராணுவ நடவடிக்கை

வவுனியா நொச்சிமோட்டைப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்று திங்கள் முதல் தொடரப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் கூறி

## புலிகளுக்கு

கட்டைக்காடு இராணுவ முகாம் மீது புலிகள் படை

## "மாவீரர் வார சிந்தனை"



''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது எனது வாழ்விடமாய் திகழ்கிறது ''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் எனக்கு சுவையான உணவைத் தந்து என்பசியைத் தீர்த்துவைக்கிறது.''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகின்றது ''

''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் நான் களைத்திருக்கும் போதெல்லாம் எனக்கு படுக்கையாக அமைகிறது.''

## வீர அஞ்சலி

கப்டன் மலரவன்

(காசிலிங்கம் விஜிந்தன்)

நாங்கள் எதை இழக்கினும்
உனது உணர்வுகளை
நினைவுகளை
நெஞ்சில் சுமப்போம்.

24-11-92 அன்று பலாலி முகாமின் கிழக்குப்புறக் காவலரண்களின் மீதான தாக்குதலில் வீரச்சாவு அடைந்த எமது கல்லூரித் தோழன் விஜிந்தனுக்கு கப்டன் மலரவன்) எமது கண்ணீர் அஞ்சலிகள்

யா/பரி. யோவான் கல்லூரி
91-ம் ஆண்டு
உயர்தர மாணவ நண்பர்கள்

(சி-3702)

## கண்ணீர் அஞ்சலி

## செல்வன் ஜோர்ச்

விபத்தில் மரணம் அடைந்த எமது கல்வி நிறுவன மாணவன் செல்வன் ஜோர்ச் அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.
*BECON* (பாரதிதாசன் கல்வி நிறுவனம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5469)

## மரண அறிவித்தல்

## காசிலிங்கம் விஜிந்தன்

### கப்டன் மலரவன், (லியோ)

(யாழ் பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)

காசிலிங்கம் விஜிந்தன் (லியோ மலரவன்) 24 - 11 - 92 இல் வீரச்சாவடைந்தார்.

அன்னார் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr. பொ. காசிலிங்கம், சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட அற்புதராணி தம்பதிகளின் அன்பு மகனும், சுஜந்தன், ஜெயந்தன், றெஜிந்தன் ஆகியோரின் அன்பு சகோதரனுமாவார்.

அன்னாரின் புகழுடல் 25 - 11 - 92 இன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படுவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

435, இராமலிங்கம் வீதி, (சங்கீதா வீதி)
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

[3703]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முகாம் மீது புலிகள் படையெடுத்து அதனை வெற்றி கொண்டு ஆயுதக் கிடங்கிலிருந்து ஆயுதங்களை அள்ளிச் சென்ற பின்னர் செப்டெம்பர் மாதத்தில் ஒரு நாள் லெப். சந்துன் குணசேகராவைச் சந்தித்த சண்டே ரைம்ஸ் செய்தியாளர் நிரேஷ் இளைய தம்பியிடம் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயுதங்களை இழந்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. போரில் இறந்தவர்களைப் பற்றி யோசித்துப் பாருங்கள் எமது தரப்பில் மாத்திரமல்ல அவர்கள் தரப்பிலும் உயிரிழந்துள்ளார்கள் கோரமான மனித உயிரிழப்புகள் பற்றியே நான் கவலைப்படுகிறேன் என்றும் அச் சந்திப்பில் அவர் கூறியதாகச் செய்தியாளர் குறிப்பிடுகிறார். இப்போது நடைபெறும் இந்தப் போர் ஒருபோதும் ஒரு முடிவுக்கும் வராது என லெப். சந்துன் குணசேகரா தன்னிடம் கூறியதாக செய்தியாளர் நிரேஷ் இளையதம்பி மேலும் தெரிவித்தார்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கோட்டை கடற்படைத் தலைமையகத்தில் அதிகாரிகள் உணவுச்சாலையில் லெப்.சந்துன் குணசேகராவுடன் தான் மதிய உணவு அருந்திய பின் அவர் இவ்வாறு கூறியதாகச் செய்தியாளர் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரர்

பருத்தித்துறை நகர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடைகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. பின்னர் அஞ்சலிக்கூட்டம் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அவ்வக் கோட்டங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்படவுள்ளன.

காலத்தில் ஒரே சீராக அனைத்து இடங்களிலும் மணிகளில் நினைவொலி எழுப்புவதற்கேற்ப கடிகாரங்களை குறித்த நேரத்திற்கு சீர்படுத்தி தயார்படுத்தி வைக்குமாறு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

டுப்படைத்தலைமையகம் கூறியுள்ளது முன்னேறிவந்தபடையினர் மீது விடுதலைப்புலிகள் மோட்டார்கள், பீரங்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தி படையினரைத் தடுத்து வருவதாகவும் அச்செய்தியில்மேலும் கூறப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

## திருமதி செயம்மா கொடுதோர்

திருமதி செயம்மா கொடுதோர் காலமானார். இவர் காலஞ்சென்ற S. S. கொடுதோர் அவர்களின் அன்பு மனைவியும், கொடுதோர் இராஜரத்தினம் (செட்டிகுளம் தற்பொழுது மடு அகதிமுகாம்) காலஞ்சென்ற கொடுதோர் - இரத்தினசிங்கம் (மட்டக்களப்பு), கொடுதோர் - யோகரத்தினம் (திருநெல்வேலி, யாழ்.), கொடுதோர் - விஜயரத்தினம், கொடுதோர் - பூபாலரத்தினம், திருமதி இரஞ்சினி தோமஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார் அன்னாரின் நல்லடக்கம் மிருசுவில் சென் நீக்கிலார் சேமக்காலையில் 25-11-92 இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

இரஞ்சினி பவனம்,
மிருசுவில்.

தகவல்
கொடுதோர் விஜயரத்தினம்
(மகன்)

(3706)

## பாபு-யூட்றிசான்

கச்சாய் வீதி சாவகச்சேரியில் வசிக்கும் பாபு றேவதி தம் தியினரின் மூத்த புதல்வன் யூட்றிசான் 24-11-92 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுஜனின் அன்பு அண்ணாவும், செல்லக்கண்டு, ஆரோக்கியராணி, டேவிட், குமாரத்தி ஆகியோரின் பேரனும் தர்மகுலம், றெஜி [சுவிஸ்] ஜெறி சுவிஸ்) டெனிராஜ், தயா, பிறிச்சிட்டா, [சுவிஸ்] ஜெயா, தயாகனி, சிறீதா ஆகியோரின்மருமகனும், றஜனி [சுவிஸ்] கமலி, பெனானி, மதி பாலு, கெனடி, றேணு, சுரேஸ், மோகன் [சுவிஸ்] ஆகியோரின் பெறாமகனும், சவரிமுத்து, பெர்னாபேத்தின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 25-11-92 இன்று 9-00 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் சேமக்காலையில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
டெனிராஜ்

(3705)

எனக்கு படுக்கையாக அமைகிறது."

"தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்"

(சி/5465)

## வீர அஞ்சலி

## கப்டன் நேரு

(ஜெயரட்ணம் பாலச்சந்திரன்)

(கிரி)

தமிழீழம் பெற்றெடுத்த
தரமான முத்துக்களே
தாயகத்தை மீட்டிடவே
வீறு கொண்டு போராடி
மாவீரர் ஆகினீரே
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்
தினமும் உங்களையே.

எல்லாளன் சனசமூக நிலையமும்,
விளையாட்டுக் கழகமும்.
நவககிரி.

(3704)

## யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 1993

துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றிற்கான கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் திகதியும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியும் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

01. கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளுதல் 03-12-92 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை.
02. பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை ஏற்றுக்கொள்ளுதல் — 04-12-92 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-11-1992 (சி/5474)